# DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.235 /2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 12 | நாள் | : | 25.09.2025 |
| பெயர் | : | கலா மணி | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 25th day of September 2025.

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் தற்போது சங்கரன்கோவில் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்தபோது 11.08.2018 ம் தேதி கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலைய கு.எண்.234/2018 வழக்கின் சொத்துக்களை நடுவரின் உத்தரவுப்படி நீதிமன்ற சொத்துப் பதிவேட்டு எண். 404/2018 ன் படி பதிவு செய்தேன். பின்னர் காவல் ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை நீதித்துறை நடுவர் பார்வைக்கு வைத்தேன். நீதித்துறை நடுவரின் உத்தரவுப்படி வரைவு கடிதம் தயாரித்து நடுவரின்

அனுமதிக்கு பின்னர் சொத்துக்களை இராசாயண பகுப்பாய்வுக்கு அனுப்ப திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கடிதம் தயாரித்து நடுவரின் ஒப்புகை பெற்று அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.14 ஆகும். நடுவரின் உத்தரவு பெற்று நான் அனுப்பிய கடிதம் அ.சா.ஆ.15 ஆகும். முன்னதாக சடலக் கூராய்வின் போது சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை இராசாயண பரிசோதனைக்கு அனுப்பு 03.08.2018 அன்று ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ.16 ஆகும். அவரது வேண்டுகோளை பரிசீலித்து நீதித்துறை நடுவர் காவலர் அக்சாள் என்பவரின் மூலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு உடல் உள்ளுறுப்புகளை கொண்டு சென்று ஒப்படைக்க அவரது அனுமதி கடிதம் வழங்கப்பட்டது. அந்த கடிதம் அ.சா.ஆ.17 ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்குவிசாரணை இல்லை**</u>

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.09.25 18:27:32 +0530

DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.235 /2024

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா . | : | 11 | நாள் | : | 25.09.2025 |
| பெயர் | : | பால முருகன் | தொழில் | : | |
| தந்தை பெயர்/ | : | | சமயம் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலூகா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 25th day of September 2025.

எதிரி ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

முதல் விசாரணை

நான் தற்போது பனவடலிசத்திரம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது 16.08.2018 காலை 10 மணிக்கு நிலையத்திலிருந்து கடவுச் சீட்டு பெற்று சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் சென்று காவல் நிலைய கு.எண்.234/2018 வழக்கின் சொத்துக்களை திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கொண்டு சென்று ஒப்படைத்து நிலையம் திரும்பி அறிக்கை செய்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.09.25 18:27:53 +0530

முதன்மை மாவட்ட நீதிமன்றம், தென்காசி

நாள் 25.09.2025